டிசம்பர் 30

## *திருக்குடும்பம்*

இவ்விழாவை ஏற்படுத்தியவர் 13-ஆம் சிங்கராய பாப்பானவர். "ஆண்டவரே, நீர் குடும்ப வாழ்வை சொல்லற்கரிய புண்ணியங்களால் அலங்கரித்தீர்" என்று இவ்விழாவில் பூசைப்பலி சபை மன்றாட்டில் நாம் செபிக்கிறோம். இச்சொற்களைப் பற்றி அதே பாப்பானவர் பின்வருமாறு கூறுகிறார்:

"குடும்பங்களின் தந்தையர் புனித சூசையப்பரிடம் ஓர் ஆச்சரியத்திற்குரிய மேல்வரிச் சட்டத்தைக் காண்பர். அவரைப் போல இவர்கள் விழிப்பாயிருக்க வேண்டும். தந்தைக்குரிய அக்கறையுடன் வாழ வேண்டும், தாய்மாருக்கு எடுத்துக்காட்டு புனித கன்னிமரியாள், அன்பு, அடக்க ஒடுக்கமுள்ள ஆசாரம், பணிவு முதலிய புண்ணியங்கள் தாய்மாரிடம் இருக்க வேண்டும். பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வந்த இயேசு, பிள்ளைகளுக்கு ஒரு மேல்வரிச்சட்டம், அரச வம்சத்தைச் சேர்ந்த திருக்குடும்பத்திலிருந்து பல படிப்பினைகளைக் கற்கலாம். செல்வத்தில் மட்டுத்திட்டம் அவசியம். துன்பத்தில் பெருந்தன்மை அவசியம். செல்வத்தை விட புண்ணியத்தை அதிகமாக மதிக்கப் பழக வேண்டும். தொழிலாளிகளும், ஏழைகளாய் உழைக்க வேண்டியிருப்பவர்களும் மகிழ்ச்சியுடனிருக்க வேண்டும். தங்கள் நிலையைப் பற்றி விசனிக்கக்கூடாது. ஏனெனில் இயேசு, மரி, சூசையும் இவர்களைப் போல் ஒவ்வொரு நாளும் உழைத்தார்கள். இவர்களைப் பலவித சங்கடங்களுக்கு உள்ளானார்கள்".

திருக்குடும்பத்தில் நம்மைக் கவரும் பல புண்ணியங்களைப் பார்க்கலாம். அதில் அதிக துலாம்பரமான புண்ணியம் இயேசு தேவனுடைய கீழ்ப்படிதலே, அவர் தந்தைக்குக் கீழ்ப்படிந்து எருசலேம் தேவாலயத்தில் மூன்று நாட்கள் தங்கினார். அது பெற்றோருக்கு எவ்வளவு வேதனை அளிக்குமென்று அவருக்கு நன்றாக தெரியும். என்றாலும் பெற்றோரை நேசிப்பதை விட கடவுளை நேசிப்பது தம் கடமை என்று அறிந்த அவர் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து தேவாலயத்தில் தங்கினார். பின் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நாசரேத்துக்குக் கூடவே சென்றார்.

**சிந்தனை:**

குடும்பத் தலைவர்கள் புனித சூசையப்பரைப் போல பிறரது பேர் கீர்த்தியை மதிக்க வேண்டும். தாய்மார் தேவதாயைப் போல அடக்க ஒடுக்கத்தோடு இருக்க வேண்டும். பிள்ளைகள், அனைத்திலும் பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும்.

**செபம்:**

இயேசு, மரி, சூசை நாங்கள் எல்லோரும் உங்களைப் போல் ஒரு மனப்பட்டு வாழ துணை செய்வீர்களாக.